## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.41/2018

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வனிதா | மதம் | : இந்து |
| க/பெ | : துரை | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : கிருஷ்ணசமுத்திரம் |
| தொழில் | : சத்துணவு ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**09.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு பிறந்தது முதல் தெரியும். மற்ற பிரதிவாதிகள் யார் என்றால் துரை எனது கணவர், 3 முதல் 5 பிரதிவாதிகள் எனது பிள்ளைகள் ஆவார்கள். நாங்களும் வாதியும் எந்த ஊர் என்றால் கிருஷ்ணசமுத்திரம் ஆவோம். வாதி என்ன புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண்.281 ஆகும். தாவா சொத்து நிலமா வீட்டு மனையா என்றால் வீட்டு மனையாகும். அதில் சின்னராஜன் கழிப்பறை கட்டியுள்ளார். வழக்கு சொத்தின் பழைய புல எண் தெரியுமா என்றால் பழைய புல எண்தான் 281 ஆகும். அதன் புதிய புல எண் தெரியுமா என்றால் போலி பத்திரங்கள் மூலம் 413 உட்பிரிவுகளாக மாற்றியுள்ளார்கள். தாவா சொத்து கிராம நத்த புறம்போக்கு என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் சொல்ல முடியுமா என்றால் கிழமேல் 25 1/2, தென்வடல் 110 அடியாகும்.

2. வழக்கு சொத்தின் நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் மேற்கே முருகா ரெட்டி மகன் சீனிவாசன் வீடு, கிழக்கே சீனிவாசன் இருந்து தற்போது கணேச ரெட்டி மகன் நாகரத்தினம் உள்ளார், வடக்கே சாலை, தெற்கே நட்டால முத்தையா உள்ளார். வாதி வழக்கு சொத்தில் கட்டிடம் கட்ட வரைப்பட அனுமதி வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்படி எதுவும் இல்லை. கழிவறை மற்றும் புழக்கடையின்

மொத்த சதுரடி சொல்ல முடியுமா என்றால் 1530 சதுரடி, 696 அல்லது 699 ஆகிய இரண்டு சதுரடியாகும். தாவா சொத்து உள்ள தெருவில்தான் நான் குடியுள்ளேனா என்றால் அதே தெருவில் என் சின்ன மகன் வீடு கட்டியுள்ளான். அதற்கு 2 வீடு தள்ளி நான் குடியுள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)